இணைப்பு V.

[535-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 396-க்கான விடையைக் காண்க.]

விடை.

தமிழ் நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் வெற்றிலைச் சாகுபடி தொடர்பாக எவ்வித ஆராய்ச்சியும் மேற்கொள்ளப் படவில்லை. என்றாலும், 'வெற்றிலை வாடல் நோய்த் தடுப்பு முறை பற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. 1959-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் பொத்தனூரில் வெற்றிலை வாடல்நோய் பற்றிய ஆராய்ச்சிப் பணி ஒன்று புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன்தொடங்கப்பட்டது. இப்பணி அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டமாக மாற்றப் பட்டு 1970 வரை செயல் பட்டு வந்து முடிவில் நின்றுவிட்டது.

அவ்வாராய்ச்சியில் கண்டறிந்ததாவது:—

வெற்றிலை வாடல் நோய் ஒருவகைப் பூசணத்தால் உண்டா கின்றது. அப்பூசணத்தின் பெயர் ''பைட்டோப்தெராபார சைட்டிகா' என்பது. இப்பூசணம் மண்ணின் மூலமாகப் பரவு கிறது. இவ்வாடல் நோய் முதலில் வேரில் தோன்றுகிறது. இந்நோய்த் தாக்குதலால் படிப்படியாக வெற்றிலைக்கொடி முழுதும் வாடி விடுகிறது. இந்நோய் குறிப்பாக குளிர்ப் பருவத்தில் அதாவது செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை விரைவாகப் பரவு கிறது. இப்பருவத்தில் இரவில் 23 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைவாக வெப்பம் கொண்ட நாட்கள் மிகவும் அதிகம் உள்ளன.

இந்தக் குளிர்ப் பருவத்தின் ஆறுமாத காலமும் மாதம் ஒரு முறை 1 சதம் அல்லது 0.5 சதம் போர்டோக் கலவை அல்லது பெட்டோலான் 0.25 சதம் போன்ற தாமிர ஆக்ஸிகுளோரைடு மருந்துகளைக் கொடியின் தூரைச்சுற்றி மண் நன்றாக நனையும்படி ஊற்றினால் இந்த நோய் நன்கு கட்டுப்படுத்தப்படுகிறது. ஏக்கருக்கு 400 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை வேரைச் சுற்றி இடுவது நோயின் கடுமையைக் குறைக்கின்றது.

தமிழ்நாடு வேளாண்ம பல்கலைக் கழகத்தின் பயிர் நோயியல் துறை 1974-ல் இந்நோய் பற்றிய ஆராய்ச்சிப் பணியைத் தொடங் கியது. 1977 மார்ச்சு முதல் இதனைப்பற்றிய ஆராய்ச்சி சேலம் மாவட்டம் வேலூரில் ஒரு பயிர் நோயியல் துணை வல்லுநர் மற்றும் ஒரு உரையாளர் உதவியுடன் செயல்பட்டுவருகிறது. இவ்வாராய்ச்சி, தனியார் வெற்றிலைக் கொடிக் கால்களில் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு பூசணக்கொல்லிகள் பரிசோதனை செய்யப்பட்டன தாமிர ஆக்சிகுளோரைடு 0.25 சதம். போர்டோக் கலவை 0.5 சதம் ஆகிய மருந்துகள் இந்நோயைக் கட்டுப்படுத்த

கூட்டுத்தலை என அறியப்பட்டுள்ளது. மேலும் 'டிக்கோனில்' என்னும் புதுவகைப் பூசணக்கொல்லி 0.1 சத மருந்தும் இவ்வாடல் நோயைத் திறம்படக் கட்டுப்படுத்தக் கூடியதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இணைப்பு VI.

[536-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 398-க்கான விடையைக் காண்க.]

சட்ட மன்றப் பேரவையில் வைக்கப்பட்ட விவர அறிக்கை

(அ) இம்மாநிலத்தில் உள்ள மொத்த தோல் பதனிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக.

(ஆ) அவர்களில் ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை.

(இ) வேலையில் அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை.

(அ), (ஆ) மற்றும் (இ):-

விவர அறிக்கை.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	சிறுவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	சென்னை ..	529	79	450	..
2	செங்கல்பட்டு ..	4,095	668	3,427	..
3	தென்னாற்காடு ..	..	..	..	..
4	வடஆற்காடு ..	7,086	244	6,842	..